# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

8066988

C

1. District : Salem
மாவட்டம்
PS: V-1 AC
காவல்நிலையம்
Year: 2019
ஆண்டு
FIR No 12/AC/2019
மு.த.அ. எண்
Date 04.06.19
நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption
Sections பிரிவுகள்: 7(a) and 7(c) of the
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018.
Sections பிரிவுகள்: Prevention of Corruption
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்: (Amendment) Act 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 03/06/19
நாள் முதல்
Date to : 03/06/19
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from : 10.00 Hr
நேரம் முதல்
Time to : 15.00 Hrs
நேரம் வரை
(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04/06/19
Time : 17.00 Hr
நேரம்
(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04/06/19
Time : 17.30 Hrs.
நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed written Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 12 Km East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : O/o The Assistant Executive Engineer, Rural
முகவரி Development. Salem Sub Division at
Ayodhiyapattinam Salem
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District :
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. V. Srinivasan
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Tr. Varadharajan
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth :
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation Deputy Inspection
தொழில் Cell officer
(g) Address : Salem Dharmapuri, Namakkal and
முகவரி Krishnagiri Districts Salem.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) Tmt. P Thenpandi Tamil, Assistant Executive Engineer Rural Development.
Salem Sub Division at Ayodhiyapattinam. Salem
(2) Tr. V Kannan. S/o Krishnan. (Contractor) 4/461. T. Kollapatti Moonkilpadi (Po)
Omalur (Tk) Salem DT.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையீட்டில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

SPECIAL COURT FOR PREVENTION OF CORRUPTION ACT * SALEM 7 *
232
06 JUN 2019

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 4.6.2019.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 4/6/19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

04/06/19 at 18.30 Hrs.

Name: பெயர் S. CHANDRAMOULI
Rank: நிலை Additional Superintendent of Police. VAC Salem No. எண்

சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/AC/2019, ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 7 (a) ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12ன் விபரம்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :

இன்று 04.06.2019 ஆம் தேதி மாலை சுமார் 17.00 மணிக்கு சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு. V.சீனிவாசன் என்பவர் சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் V.சீனிவாசன், துணை ஆய்வுக்குழு அலுவலர், சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், சேலம். பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சேலம். அய்யா, சேலம் உபகோட்ட ஊரக வளர்ச்சி உதவி செயற்பொறியாளர் திருமதி.தென்பாண்டி தமிழ் அவர்கள் சேலம் உபகோட்டத்தில் உள்ள சேலம், வாழப்பாடி, பனமரத்துப்பட்டி, ஏற்காடு மற்றும் அயோத்தியாபட்டிணம் ஆகிய ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சிதுறை மூலம் செயல்படுத்தப்படும் ஒப்பந்தப் பணிகளுக்காக சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்த தொகையில் சுமார் 2 சதவீதம் கமிஷன் தொகையை கையூட்டாக கேட்டு பெறுவதாக கிடைத்த நம்பத்தகுந்த ரகசிய தகவலின் பேரில் 03.06.2019 ஆம் தேதி மாலை சுமார் 03.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை நான் மற்றும் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களும் இணைந்து மேற்படி சேலம் உபகோட்ட ஊரக வளர்ச்சி உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டோம். இந்த சோதனையின் போது மேற்படி அலுவலகத்தில் தென்மேற்கு மூலையில் கண்ணாடியால் தடுக்கப்பட்ட அறையில் தெற்கு புற சுவர் ஓரமாக வடக்கு பார்த்தவாறு இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த உதவி செயற்பொறியாளர் திருமதி.பி.தென்பாண்டி தமிழ் அவர்களிடம் விசாரித்ததில் அவர் தான் சேலம் உபகோட்ட ஊரக வளர்ச்சி உதவி செயற்பொறியாளராக 1.3.2019 முதல் பணிபுரிந்து வருவதாகவும், தான் பணிபுரியும் சேலம் உபகோட்ட அதிகார எல்லையில் உள்ள சேலம், வாழப்பாடி, பனமரத்துப்பட்டி, ஏற்காடு மற்றும் அயோத்தியாபட்டிணம் ஆகிய ஒன்றியங்கள் இருப்பதாகவும் அந்த ஒன்றியங்களில்

SPECIAL COURT FOR PREVENTION OF CORRUPTION ACT * SALEM-7. *
232
06 JUN 2019

ஊரக வளர்ச்சித்துறை சார்பாக நடைபெறும் வளர்ச்சிப் பணிகளுக்கு மேல் அளவீடு செய்யும் பணி தனக்கு உள்ளதாகவும் அவ்வாறு தான் மேல் அளவீடு செய்தபிறகு தன்னிடம் சமர்பிக்கப்படும் பட்டியல் கோப்பு, அளவீட்டு புத்தகம் ஆகியவற்றை தனது அலுவலக உதவி பொறியாளர் மூலம் சரி பார்த்து ஒப்புதல் அளித்து, அவற்றை பட்டியல் தொகை பாஸ் செய்து சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு வழங்குவதற்காக அவற்றை வட்டார வளர்சி அலுவலர் கிராம ஊராட்சி அவர்களுக்கு அனுப்புவதாகவும் தெரிவித்தார். அவருக்கு முன்பிருந்த டேபிளில் ஆவணங்களும், அடர்ந்த பச்சை கலர் கைப்பை ஒன்றும், அதற்கு முன்புறம் பிங்க் கலர் பாலிதீன் கவர் ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது. பின்னர் சோதனைகுழுவினர் மேற்படி மேஜை மீதிருந்த பிங்க் கலர் பாலிதீன் பையின் உள்ளே இருந்து ஒரு பிஸ்கெட் கலர் லெதர் மணிபர்சை எடுத்து சோதனை செய்தபோது அதில், 4 ஆவது தடுப்பில் இருந்து ஒரு பிரௌன் கலர் ஆபீஸ் கவரில் 44 ஐநூறு ரூபாய் நோட்டுகள் மொத்தம் ரூ.22,000/– ஒரு கற்றையாகவும், 5 ஆவது ஜிப் வைத்த தடுப்பில் 12 ஐநூறு ரூபாய் நோட்டுகள் மொத்தம் ரூ.6,000/– ஒரு கற்றையாகவும், 6 ஆவது தடுப்பில் Valapadi என பென்சிலில் எழுதப்பட்ட வெள்ளை நிற ஆபீஸ் கவரில் 6 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள் மொத்தம் ரூ.12,000/– ஒரு கற்றையாகவும், 8 ஐநூறு ரூபாய் நோட்டுகள் மொத்தம் ரூ.4,000/– ஒரு கற்றையாகவும் ஆக மொத்தம் ரூ.44,000/– இருந்தது. மேற்படி தொகையை பற்றி திருமதி.தென்பாண்டிதமிழ் அவர்களிடம் விசாரித்தபோது அவர் மேற்படி 4 ஆவது தடுப்பில் பிரௌன் கலர் ஆபீஸ் கவருடன் இருந்த ரூ.22,000/–த்தையும், 5 ஆவது ஜிப் வைத்த தடுப்பில் இருந்த ரூ.6,000/–த்தையும், அயோத்தியாபட்டிணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஒப்பந்ததாரர்கள் தனக்கு இன்று கமிஷனாக கொடுத்த தொகை என்றும், 6 ஆவது தடுப்பில் இருந்த Valapadi என பென்சிலில் எழுதப்பட்ட வெள்ளை நிற ஆபீஸ் கவருடன் இருந்த ரூ.16,000/–த்தை வாழப்பாடி ஒன்றிய ஒப்பந்ததாரர் திரு.தனசேகரன் என்பவர் இன்று முற்பகல் தனக்கு கமிஷனாக கொடுத்த தொகை என்று தெரிவித்ததால் மேற்படி தொகை ரூ.44,000/– மற்றும் பணம் வைக்கப்பட்டிருந்த MOOCHIES என எழுத்துகளும் கழுகு தலை உருவம் கொண்ட மெட்டாலிக் வில்லை பொருத்தப்பட்ட பிஸ்கட் கலர் மணிபர்சும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் சோதனை குழுவினர் உதவி செயற்பொறியாளரின் மேஜை மீது சோதித்துப் பார்க்க அதில்

(1) M. Book No. 28/2018-19 ஒப்பந்ததாரர் திரு.என். தனசேகரன் சம்பந்தப்பட்ட 7.82 லட்சம் மதிப்புள்ள வாழப்பாடி ஒன்றியம் சம்பந்தப்பட்ட பணியின் FINAL CONTRACT CERTIFICATE அதனுடன் இணைந்த work completion report (வேலை முடிவு அறிக்கை) யில் உதவி செயற்பொறியாளர் திருமதி.தென்பாண்டி தமிழ் 12.04.2019 முன் தேதியிட்டு சுருக்கொப்பம் செய்துள்ளது தெரியவந்தது. (2) M. Book No. 1/18-19 ஒப்பந்ததாரர் G.M.S. & Co., சம்பந்தப்பட்ட 3.11 லட்சம் மதிப்புள்ள அயோத்தியாபட்டிணம் ஒன்றியம் சம்பந்தப்பட்ட பணியின் FINAL CONTRACT CERTIFICATE அதனுடன் இணைந்த work completion report (வேலை முடிவு அறிக்கை) யில் உதவி செயற்பொறியாளர் திருமதி.தென்பாண்டி தமிழ் 28.05.2019 முன் தேதியிட்டு சுருக்கொப்பம் செய்துள்ளது தெரியவந்தது. (3) M. Book No. 7/18-19 ஒப்பந்ததாரர் R.மோகன்ராஜ் சம்பந்தப்பட்ட 3.80 லட்சம் மதிப்புள்ள அயோத்தியாபட்டிணம் ஒன்றியம் சம்பந்தப்பட்ட பணியின் FINAL CONTRACT CERTIFICATE அதனுடன் இணைந்த work completion report (வேலை முடிவு அறிக்கை) யில் உதவி செயற்பொறியாளர் திருமதி.தென்பாண்டி தமிழ் 31.05.2019 முன் தேதியிட்டு சுருக்கொப்பம் செய்துள்ளது தெரியவந்தது. (4) M. Book No. 6/17-18 ஒப்பந்ததாரர் R.மோகன்ராஜ் சம்பந்தப்பட்ட 2.50 லட்சம் மதிப்புள்ள அயோத்தியாபட்டிணம் ஒன்றியம் சம்பந்தப்பட்ட பணியின் FINAL CONTRACT CERTIFICATE அதனுடன் இணைந்த work completion report (வேலை முடிவு அறிக்கை) யில் உதவி செயற்பொறியாளர் திருமதி.தென்பாண்டி தமிழ் 28.05.2019 முன் தேதியிட்டு சுருக்கொப்பம் செய்துள்ளது தெரியவந்தது. (5) M. Book No.29/2018-19 Departmental work சம்பந்தப்பட்ட 2.32 லட்சம் மதிப்புள்ள வாழப்பாடி ஒன்றியம் சம்பந்தப்பட்ட பணியின் FINAL CONTRACT CERTIFICATE அதனுடன் இணைந்த work completion report (வேலை முடிவு அறிக்கை) யில் உதவி செயற்பொறியாளர் திருமதி.தென்பாண்டி தமிழ் 12.04.2019 முன் தேதியிட்டு சுருக்கொப்பம் செய்துள்ளது தெரியவந்தது. மேற்படி 5 ஆவணங்களின் அலுவலக நகல்கள் இருந்தது பற்றி அவரிடம் கேட்க அவர் மேற்படி பணிகள் முடித்தமைக்காக அந்த ஆவணங்களில் இன்று முன் தேதிகளிட்டு கையொப்பம் செய்ததாக தெரிவித்ததால் மேற்படி 5 ஆவணங்களையும்

SPECIAL UNIT FOR PREVENTION OF CORRUPTION
232
06 JUN 2019
SALEM

விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு சோதனை குழுவினர் அலுவலக வருகைப்பதிவேட்டைப் பார்வையிட்டதில் உதவிப் பொறியாளர் திருமதி.ஜான்சிராணி, அலுவலக உதவியாளர் திரு.கந்தசாமி, ஓட்டுநர் திரு.சி.ராஜா ஆகியோர் அலுவலுக்கு வந்ததாக வருகைப்பதிவேட்டில் சுருக்கொப்பங்கள் செய்துள்ளனர். அதை உதவி பொறியாளர் திருமதி.ஜான்சிராணி, உதவி செயற்பொறியாளர் திருமதி.தென்பாண்டி தமிழ் ஆகியோர் இன்றைய தின வருகைப் பதிவேட்டை முடிவு செய்து சுருக்கொப்பமிட்டுள்ளனர். மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் ஓட்டுநர் திரு.ராஜா குறித்து கேட்டபோது அவர் வெளியில் சென்றிருப்பதாக திருமதி. ஜான்சிராணி அவர்கள் தெரிவித்தார். உதவி பொறியாளர் ஆஜர் செய்த Year 2019-2020 Rural Development Assistant Executive Engineer, Salem Sub division என உள்ள Staff Attendance Register விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு மேற்படி உதவி செயற்பொறியாளர் அறைக்கு வெளியே அலுவலக ஹாலில் இருந்த 4 நபர்களில் முதலாவதாக இருந்தவரை விசாரிக்க அவர் R.விஜயகுமார் த/பெ.வி.ரங்கராஜன், 8/199 ராஜ வீதி, கொண்டப்பநாயக்கன்பட்டி, கன்னங்குறிச்சி அஞ்சல், சேலம் என தனது பெயர் விலாசத்தை தெரிவித்து தான் பி.கமலக்கண்ணன் என்ற அயோத்தியாபட்டிணம் ஒன்றிய ஒப்பந்ததாரரிடம் பணிபுரிவதாகவும், மேற்படி ஒப்பந்ததாரர் சுக்கம்பட்டி கிராமத்தில் மோட்டார் பம்பு பொருத்தும் ரூ.4 லட்சம் மதிப்புள்ள பணி செய்து முடித்தமைக்கு இறுதிபட்டியல் தயாரிப்பதில் ஏற்பட்ட பிழை சம்பந்தமாக அதை திருத்தும் பொருட்டு உதவி செயற்பொறியாளர் அலுவலகம் வந்ததாக கூறினார். இரண்டாவதாக இருந்த நபரை விசாரிக்க அவர் N.சக்திவேல், த/பெ.நல்லதம்பி, 2/49 உஷா காம்பளக்ஸ், அயோத்தியாபட்டிணம், சேலம் என தனது பெயர் விலாசத்தை தெரிவித்து தான் தனது சகோதரர் ராஜகோபாலின் மகன் R.மோகன்ராஜ் என்பவர் அயோத்தியாபட்டிணம் ஒன்றிய ஒப்பந்ததாரராக உள்ளதாகவும், அவரது ஒப்பந்த பணிகளை தான் கவனித்து வருவதாகவும், இன்று காலையில் மோகன்ராஜ்-உடன் இந்த அலுவலகத்திற்கு வந்து 6.6.2019 ஆம் தேதி நடைபெறவிருக்கும் அவரது திருமணத்திற்காக உதவி செயற்பொறியாளருக்கு அழைப்பிதழ் வைத்துவிட்டு ஏற்கனவே திரு.மோகன்ராஜால் செய்து முடித்த 2 திட்டப் பணிகளுக்கான பட்டியல் தொகைகளை பெற்றுக் கொண்டதை

உதவி செயற்பொறியாளரிடம் தெரிவித்துவிட்டு இன்னும் மீதம் உள்ள ஒரு பணிக்கான அளவீட்டுப் புத்தகம் மற்றும் பட்டியலை இன்று மாலை உதவிப் பொறியாளரிடம் இருந்து பெற்றுக் கொள்வதாகவும் உடனே அதை மேலொப்பம் செய்து தரும்படியும் கேட்டுக் கொண்டதாகவும், அதற்காக தற்போது மேற்படி மோகன்ராஜுடன் அலுவலகத்திற்கு வந்ததாகவும் தெரிவித்தார். அவருடன் வந்த மூன்றாவது நபரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் மோகன்ராஜ் என்றும் மற்ற விபரங்களை மேற்படி சக்திவேல் கூறியதை ஒத்துக் கூறினார். நான்காவதாக இருந்த நபரை பற்றி விசாரிக்க அவர் K.கண்ணன் த/பெ.கிருஷ்ணன், 4/461, டி.கொல்லப்பட்டி, மூங்கில்பாடி, ஓமலூர் தாலுக்கா, சேலம் மாவட்டம் என தனது பெயர் விலாசத்தை சொல்லி தனது தாயார் சாந்தி கிருஷ்ணன் பெயரில் அயோத்தியாபட்டிணம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒப்பந்த பணிகள் செய்து வருவதாகவும் தான் ஆச்சாங்குட்டப்பட்டி அருகில் உள்ள செங்காட்டூர் என்ற இடத்தில் ரூ.3 லட்சம் மதிப்புள்ள குடிநீர் பைப்லைன் அமைக்கும் பணிக்கு இறுதி பட்டியல் தயாரிக்கும்போது ஏற்பட்ட பிழை சம்பந்தமாக அதை திருத்தும் பொருட்டு இன்று மேற்படி அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவரிடம் அவர் வைத்துள்ள தொகை குறித்து கேட்டபோது அவர் தனது பேண்டின் வலதுபக்க முன் பாக்கெட்டிலிருந்து ஒரு மருந்துக் கடை மாத்திரைகள் போடும் ஒரு கிழிந்த நிலையில் இருந்த காக்கி கலர் கவரை எடுத்து ஆஜர் செய்தார். சோதனைக் குழுவினர் அந்தக் கவரை சோதித்து பார்த்தபோது அதில் 12 ஐநூறு ரூபாய் நோட்டுகள் மொத்தம் ரூ.6,000/– இருந்தது. மேற்படி தொகை குறித்து கேட்டபோது அவர் தனது ஒப்பந்த பணிகளை செய்த கூலியாட்களுக்கு பணம் கொடுப்பதற்காக அந்த பணத்தை கவரில் போட்டு வைத்திருப்பதாக தெரிவித்தார். மேற்படி ரூ.6,000/–த்தை அவர் வைத்திருந்த விதம் சந்தேகத்திற்குரியதாக இருந்ததாலும், அவர் மேற்படி பணத்தை வைத்திருந்ததற்காக சொன்ன காரணம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லாததாலும், மேற்படி ரூபாய் 6,000/–த்தையும், மேற்படி கிழிந்த நிலையில் இருந்த மருந்துக்கடை காக்கி கலர் கவரையும் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதர விபரங்கள் குறித்து திடீர் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட எனது நடவடிக்கைகள் ந.க.எண்.77/2019/ஆ.ஆ.1 நாள்.04.06.2019 மற்றும் நடவடிக்கை சமயத்தில் பெறப்பட்ட வாக்குமூலங்களில் விரிவாக கூறப்பட்டுள்ளது. அவைகள் இந்த புகாருடன்

SPECIAL UNIT FOR PREVENTION OF CORRUPTION ACT
232
06 JUN 2019
SALEM-7

இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.50,000/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். எனக்கு பணிநிமித்தம் காரணமாக அலுவல்களை கவனித்துவிட்டு தற்போது வந்து தங்களிடம் புகார் கொடுக்கிறேன். இந்த நிகழ்வு குறித்து உண்மை நிலை அறிய தக்க புலன் விசாரணை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxxx 04.06.2019 (V.Srinivasan)

Sir, Received the complaint at 17.00 hrs today on 04.06.2019 and registered a case in Salem V&AC Cr.No.12/AC/2019, u/s 7 (a) and 7 (A) of the Prevention of Corruption (Amendment) Act 2018 on 04.06.2019 at 17.30 hrs and took up for investigation. Sdxxxx 04.06.2019 (S.CHANDRAMOULI), ADDL. SUPDT. OF POLICE, V&AC, SALEM.

Original FIR along with original computer typed complaint of Tr.V.Srinivasan, Deputy Inspection Cell Officer, Salem, Dharmapuri, Namakkal and Krishnagiri Districts is submitted to the Hon'ble Special Judge for trial of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

4/6/19

(S.CHANDRAMOULI),
ADDL. SUPDT. OF POLICE,
V&AC, SALEM.